1987 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் நிலத்தின் மதிப்பு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் பத்திரப் பதிவு செய்யும்போது மட்டும் அந்த நிலத்தினுடைய மதிப்பு குறைத்துக் காட்டப்படு கிறது. அதைப் போக்க வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த வழி காட்டும் மதிப்பீடு என்பது இறுதியான முடிவு அல்ல. அதை அடிப்படையாக வைத்து பத்திரப் பதிவு செய்பவர்களை வற்புறுத்தக் கூடாது என்றும் ஆணையிடப்பட் டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : * *

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு உறுப்பி னர் சொல்கிற இவ்விஷயம் பற்றி புதியதாக தகவல் தயாரிக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டே கூடாது. அதை தனியாக எழுதிக் கொடுங்கள். இதை நீக்குகிறேன்.

திருமானிக்குழி வானகுரீஸ்வரர் ஆலய ராசகோபுரம் புதுப்பித்தல்.

52—(*வினா எண் 9354) திரு. துரை அன்பரசன்: மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி—திருமானிக்குழி எனும் ஊரி லுள்ள அருள்மிகு வானகுரீஸ்வரர் ஆலய ராசகோபுரம் சிதைந் துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுமா?

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திரு மானிக்குழி அருள்மிகு வானகுரீஸ்வரர் திருக்கோயிலின் வாயிலில் ஐந்து நிலைகளுடன் கூடிய இராசகோபுரம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இத்திருக்கோயில் திருப் பணி வேலைகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சி துறை, கடலூர் உதவி ஆணையரால் திருப்பணிக் குழு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அறநிலையச் சட்ட விதிகளைப் பின் பற்றி விரைவில் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவில் சிலைகள் மற்றும் நகைகளை பாதுகாக்க கண்காணிப்பு குழுக்கள்.

53—(*வினா எண் 12151)—**திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் சிலைகள் மற்றும் நகைகளை பாதுகாக்க மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோயில்களில் உள்ள சிலைகள் பாது காப்பு தொடர்பாக கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத் திலும் விழிப்புக்குழு அமைத்து பாதுகாப்பு நடவடிக்கை செய்யப் பட்டுள்ளது.

திருக்கோயில்களில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் விலை யுயர்ந்த பொருட்களை பாதுகாக்கவும், தக்க ஆலோசனை தெரி விக்கவும், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் 6 உறுப்பினர்கள் அடங்கிய முதல்தர கமிட்டி 12—3—1986-ல் அமைக்கப்பட்டு அதன்படி இயங்கி வருவதால் மாவட்ட அளவில் இதற்கென தனியாக கண்காணிப்புக்குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.